# தயிர் வடை, கார தோசை, காலி பிளவர் ரசம்... 'சூப்பர் டேஸ்ட்' என்றார் ராகுல்

**சென்னை, அக். 22-**

சென்னையில் தங்கியிருந்த ராகுல் காந்தி தனது நண்பர்களுடன் அசோக் நகரில் உள்ள சரவண பவன் ஓட்டலுக்கு திடீரென வந்தார். எந்தவித பந்தாவும், போலீஸ் பாதுகாப்பும் இல்லாமல் ரொம்ப எளிமையாக நண்பர்களோடு 'குவாலிஸ்' காரில் வந்திறங்கிய ராகுல், அந்த ஓட்டல் தயாரிப்பான தயிர் வடை, கார தோசை மற்றும் ரசம் போன்ற நம்மூர் ஐயிட்டங்களை ருசித்து சாப்பிட்டார். 'பில்' தொகையையும் அவரே கொடுத்தார். ராகுலுக்கு பரிமாறிய ஓட்டல் சர்வருக்கு 112 ரூபாய் 'டிப்ஸ்' கிடைத்தது.

தமிழகத்துக்கு இரண்டு நாள் பயணமாக ராகுல் வந்திருந்தார். திருச்சி, மதுரை, கரூர் நகரங்களுக்கு சென்று விட்டு நேற்று காலை சென்னை வந்தார். சென்னையில் விமான நிலைய வளாகத்தில் உள்ள வி.ஐ.பி.,க்கள் தங்கும் அறையில் தங்கியிருந்தார்.

அவருக்கு டில்லியிலிருந்து பாதுகாப்பு படையினர் உடன் வந்திருந்தனர். அவர்களும் அங்குள்ள மற்றொரு அறையில் தங்கியிருந்தனர்.

பகல் 11.30 மணியளவில் அவர் திடீரென சென்னையில் உள்ள சைவ உணவகம் ஒன்றில் சாப்பிட வருவதாக சென்னை மாநகர பாதுகாப்பு போலீஸ் பிரிவுக்கு தகவல் கிடைத்தது. அசோக் நகரில் போலீஸ் பயிற்சிக் கல்லூரி எதிரே உள்ள சரவண பவன் ஓட்டலுக்குத்தான் அவர் வரப் போவதாக தகவல் கிடைத்தது. அச்சாலையில் சாதாரண உடையில் போலீசார் நிறுத்தப்பட்டனர்.

அசோக் நகர் சரவண பவனுக்கு 12.30 மணிக்கு ராகுல் வந்தார். ராகுல் வருவதை அறிந்ததும் பாதுகாப்புப் படை உதவி கமிஷனர் ராஜேந்திரன் விரைந்தார்.

அதற்குள் ராகுல் தனது நண்பர்கள் மூன்று பேருடன் சரவண பவன் ஓட்டலுக்குள் நுழைந்து விட்டார். மாடியில் உள்ள 'கேபினில்' அவர்கள் நான்கு பேரும் சென்றனர். ராகுலுக்கு பாதுகாப்பாக வந்தவர்களும் சாதாரண உடையில் பின் தொடர்ந்தனர். பச்சை நிற கோடு போட்ட சட்டையும், ஜீன்ஸ் பேன்ட்டும் ராகுல் அணிந்திருந்தார்.

ராகுல் அமர்ந்திருந்த 'கேபினுக்கு' சர்வர் ஒருவர் 'சபாரி' உடையில் இருந்தவர் உள்ளே சென்றார். அவரை பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்து நிறுத்தி விசாரித்தனர். 'நான் சர்வர்' என்றார் அவர். "உங்கள் ஓட்டலுக்கு வந்திருப்பது காங்கிரஸ் தலைவர் சோனியாவின் மகன் ராகுல். சாதாரண உடை அணிந்த சர்வர் இருந்தால் அனுப்புங்கள். நீங்கள் 'சபாரி' அணிந்திருப்பதால், உங்களை அவர் போலீஸ் என்று கருதுவார்," என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து ஓட்டலின் மேலாளர் வந்தார். 'மெனு கார்டு' அவருக்கு தரப்பட்டது. 'தயிர் வடை தாருங்கள்' என்று கேட்டார். அதை கேட்டு சர்வர் எடுத்துக் கொண்டு வந்ததும் பாதுகாப்பு அதிகாரிகள் அவரை தடுத்தனர். 'ராகுலுக்கு எது கொடுத்தாலும், அதே போன்ற உணவு வகைகளே எங்களுக்கும் தரப்பட வேண்டும். அவருக்கு முன்னதாக நாங்கள் சாப்பிட்டு பார்த்த பிறகே, அந்த உணவு வகைகளை அவருக்கு தர வேண்டும்' என்று கட்டளையிட்டனர்.

அதன்படியே பாதுகாப்பு அதிகாரிகள் தயிர் வடையை சாப்பிட்டதும், ராகுலுக்கும் அவரது நண்பர்களுக்கும் தயிர் வடை சென்றது. அடுத்து 'காலிபிளவர் ரசம்' சென்றது. மூன்றாவது வகையாக கார தோசையை சாப்பிட்டார் ராகுல். பிறகு அப்பளம், ஆரஞ்சு ஜூஸ், 'பட்டர் ஸ்காட்ச்' ஐஸ்கிரீம் அனைத்தையும் சாப்பிட்டார். தனி கேபினில் அவரது பாதுகாப்பு அதிகாரிகளும் அதே வகைகளை ரசித்து ருசித்தனர். ராகுலும் அவரது நண்பர்களும் சாப்பிடுவதை படம் எடுக்க ஓட்டல் நிர்வாகத்தினர் விருப்பம் தெரிவித்தனர். அதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

ராகுல் வந்திருக்கும் விஷயம் ஓட்டல் அதிபர் ராஜகோபாலின் மகன் சரவணனுக்கு தாமதமாக தான் தெரிந்தது. உடனே அவர் அங்கு விரைந்து வந்தார். ராகுல் சாப்பிட்டு முடித்து வந்த போது, சரவணன் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். 'சூப்பர் டேஸ்ட்' என்று பாராட்டினார்.

அதற்குள் 'பில்' வந்தது. மொத்த தொகை 787 ரூபாய் 50 காசு என்றிருந்தது. அவர் தனது பர்சை திறந்து ஆயிரம் ரூபாயை சர்வரிடம் கொடுத்தார். மீதி தொகை 112 ரூபாய் 50 காசை சர்வர் வந்து கொடுத்த போது 'டிப்ஸ்' ஆக வைத்துக் கொள்ளும்படி கூறிவிட்டு சென்றார்.